டாக்டர் இரா. சனார்த்தனம்: வெள்ளாற்றின் கரையில் மக்கள் மண் எடுக்கின்ற அரிப்புணர்ச்சியில் இந்த அரிப்பு ஏற்பட்டிருக்கிறதா? ஏற்பட்டிருக்கிற அரிப்பு ஆற்றுக்கா அல்லது கரைக்கா?

மாண்புமிகு திரு. கா. இராசா முகமது: வெள்ளம் அதிகமாகின்றபோது, நீர் வேகமாகச் சென்று மணலை அரித்துவிடுகிறது. அரிப்பு கரைக்குத்தான். மக்கள் மணலை அரித்துக்கொண்டு செல்கிறார்கள் என்றால், அப்படிப்பட்ட மன அரிப்பு இல்லாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதை அரசு பார்த்துக்கொள்ளும்.

கேரள மாநிலத்திற்கு சிமெண்ட்.

*** 143 வினா.—திரு. ஆற்காடு நா. வீராசாமி (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) :** மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கேரள மாநிலத்திலிருந்து பெறப்படும் மின்சாரத்திற்குப் பதிலாக தமிழ்நாட்டில் இருந்து ஆண்டொன்றுக்கு எவ்வளவு சிமென்ட் அம்மாநிலத்திற்கு அனுப்பப்படுகிறது ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: தமிழகத்திற்கும் கேரளத்திற்கு மிடையே ஒரு உடன்படிக்கை 11—2—1980-ம் தேதியன்று ஏற்பட்டது. தன் மாநில தேவைக்கும், கர்நாடக மாநிலத்திற்கும் வழங்க ஏற்றுக் கொண்டது போக, மீதம் உபரியாகவுள்ள மின்சக்தி முழுவதையும் கேரளம் தமிழகத்திற்கு வழங்கும். கேரளத்திலிருந்து பெறும் மின் சக்தியைக் கொண்டு தமிழகத்தி லுள்ள சிமெண்ட் ஆலைகளால் கூடுதலாகத் தயாரிக்கப்படும் சிமெண்ட்டை கேரளமும் தமிழகமும் 70 : 30 என்ற விகிதாச்சாரத்தில் பகிர்ந்து கொள்ளும். இதன்படி 1980-ம் ஆண்டில் (ஜூலை மாதம் முடிய) 2,35,800 மெட்ரிக் டன் அளவு சிமெண்ட் கேரளாவுக்கு அனுப்பப்பட்டது.

திரு. ஆற்காடு நா. வீராசாமி: தலைவர் அவர்களே, கேரளாவும் தமிழகமும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே இரண்டு லட்சம் டன்னுக்கும் அதிகமான அளவுக்கு சிமெண்ட் கேரளாவிற்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு தமிழகத்திலே சிமெண்ட் பற்றாக்குறை இருப்பதால், 70:30 என்ற சதவிகிதத்தைக் குறைத்து நமக்கு 90 சதவிகிதமும், மீதி 10 சதவிகிதம் கேரளத்திற்கும் கொடுக்க தமிழக அரசு ஏற்பாடு செய்யுமா?

1981 மார்ச் 21]

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: 90 சதம் என்பதை 95 சதவிகிதம் என்றுகூட நாம் வைத்துக்கொள்ளலாம். ஆனால் மின்சாரம் தருவது கேரளம். அவர்கள் அதை ஒத்துக்கொள்ள வேண்டும். அந்தப் பிரச்சினையும் இருக்கிறது.

திரு. க. இராமமூர்த்தி: இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆண்டு ஒன்றுக்கு உத்தேசமாக எந்த அளவுக்கு மின்சாரம் பெற இருக்கிறோம் என்று அறிய விரும்புகிறேன். அத்தோடு அரிசிக்குப் பதிலாக மின்சாரம் பெற வேண்டுமென்ற கருத்து அரசுத் தரப்பிலேயிருந்து மேலோட்டமாக வந்தது. அதைப்பற்றி அரசு ஆழ்ந்து பரிசிலனை செய்துகொண்டிருக்கிறதா? அப்படிப் பட்ட எண்ணம் ஏதாவது அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: அரிசி தருகின்ற பிரச்சினை எனக்கு சம்பந்தம் இல்லாத பிரச்சினை. அதுபற்றி எனக்கும் விவரம் தெரியாது. சிமெண்டைப் பொறுத்தவரைக்கும் சிமெண்டை எந்த அளவுக்குக் கொடுக்கிறோம் என்பதுதான் கேள்வி. கேரளத்திற்கு 2,35,800 மெட்ரிக் டன் அளவு கொடுக்கப்படுகிறது. மின்சாரம் எவ்வளவு யூனிட்டுகள் என்பதுபற்றிய சரியான விவரம் இப்போது என்னிடம் இல்லை. அதுபற்றி தனியாகக் கேள்வி போட்டால், விவரம் தருகிறேன்.

திரு. க. இராமமூர்த்தி: தமிழகம் மொத்தமாக அனுப்புவதுபற்றி ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுபோல ஆண்டு ஒன்றுக்கு மற்ற மாநிலங்களுக்கு எவ்வளவு சிமெண்ட் தர இருக்கிறது?

மாண்புமிகு மேலவைத் தலைவர்: கேள்வி கேரளத்தைப்பற்றித்தான் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதாக இருந்தால், சொல்லட்டும். அதுபற்றி விவரம் அவரிடம் இருக்குமா என்பதுதான் பிரச்சினை.

திரு. க. இராமமூர்த்தி: நம்முடைய அரசு கேரளத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு எந்த அளவுக்கு சிமெண்ட் கொடுக்கலாம் என்று மதிப்பீடு செய்திருக்கிறது. வெவ்வேறு மாநிலங்களிலிருந்து இதுபோன்ற கோரிக்கைகள் வருகிறபோது, அதைப்பற்றிப் பரிசிலனை செய்ய வேண்டியதாக இருக்கும். அதையெல்லாம் மனதிலே கொண்டு அரசு பரிசீலனை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: மத்திய சிமெண்ட் கண்ட்ரோல் அதிகாரத்தின் கீழ் அவர்களுடைய உத்தரவைப் பெற்று அந்த அளவின்படி மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. அது தனிப் பிரச்சினை. இப்போது கேள்வி கேட்டிருப்பது, மின்சார வெட்டு இருக்கும்போது, கேரளாவிடமிருந்து உபரி மின்சாரத்தைப் பெற்று, அதன் மூலம் உற்பத்தியாகின்ற

சிமெண்டில் 70:30 என்ற விகிதத்தில் கொடுக்கிறோம். அவர்களுக்குக் கொடுப்பது 2,35,800 மெட்ரிக் டன் என்று சொன்னேன். அதுதான் இங்கே கணக்கில் இருக்கிறது. அதைத்தான் நான் இங்கே எடுத்துச் சொன்னேன்.

Tiruchirappalli Town Cement Stockists

* 144. *Q.*—Thiru A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state:

(a) whether it is a fact that Cement stockists in Tiruchirappalli Town, arrested in the second week of September 1980, for alleged offences under the Prevention of Blackmarketing and Maintenance of Supplies of Essential Commodities Act, 1980, were handcuffed and taken to jail; and

(b) if so, the grounds of arrest and the charges that have been framed against the accused?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: (அ) திருச்சிராப்பள்ளி நகரில் வியாபாரிகள் சிமெண்ட் விற்பனையில் சில தவறுகள் நடந்திருப்பதாக 11—9—1980-ல் பதுக்கல் ஒழிப்புப் பிரிவு உணவு புலனாய்வுத் துறை போலீசாரால் கைது செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட உள்ளூர் காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டபொழுது கையில் விலங்கிடப்படவில்லை.

(இ) இவ்வழக்கு சம்பந்தமாக பதுக்கல் ஒழிப்புப் பிரிவு புலனாய்வுத் துறை போலீசாரால் விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

Thiru A. R. DAMODARAN : Sir, I would like to ask the Hon. Minister what the grounds of arrest were. I have here a report where it is stated that for a technical offence of the godown being located elsewhere, these people were hauled up under the Black-marketing Act. May I know the grounds on which the charges were made?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: சில தகவல்கள் வந்தன. அங்கே விநியோகத்தில் சில முறைகேடுகள் நடந்திருப்பதாகவும், அளவுக்கு மேல் சிமெண்ட் ஸ்டாக் வைத்திருந்ததாகவும், அதிலே சில தவறுகள் நடந்ததாகவும் தகவல்கள் வந்தன. அந்தத் தகவல்களின் அடிப்படையிலே அங்கே போய் விசாரித்திருக்கிறார்கள். அவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இன்னும் முடிவாக 'சார்ஜ் ஷீட்' போடவில்லை. 'எப்.ஐ.ஆர்.' ஸ்டேஜிலே தான் இருக்கிறது. அந்த நிலைமையில்தான் பிரச்சினை இருந்து கொண்டிருக்கிறது.